செய்தி வெளியீடு எண்:98 நாள்:08.02.2021

## பத்திரிக்கை செய்தி

மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, தமிழ்நாட்டு மக்களின் சுகாதார நலனுக்காக பல்வேறு திட்டங்களை, தேசிய நலவாழ்வுக் குழுமம் மூலம் செயல்படுத்தி வருகிறது. மக்களின் மனநலனுக்காக மாவட்டந்தோறும் ஆரம்ப சுகாதாரம் முதல் சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் வரை பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

தேசிய நலவாழ்வுக் குழுமம் மூலம் செயல்படும் மாவட்ட மனநல திட்டத்தின் சிறப்பு அம்சமாக அவசரசிகிச்சை மற்றும் மீட்பு மையங்கள் (Emergency Care and Recovery Centers) செயல்பட்டு வருகின்றன. தற்போது இம்மையங்கள் ஏழு மாவட்டங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் சாலையோரங்களில் சுற்றித்திரியும் மனநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான சிகிச்சை அளித்து குணமானவுடன் அவர்களை குடும்பத்தினருடன் இணைந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து மாவட்டங்களிலும் இம்மையங்களை விரிவுபடுத்த தேசிய நலவாழ்வு குழுமம் முனைந்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதல் பெற்று தேசிய நலவாழ்வுக் குழுமம், 'பான்யன்' (The Banyan) என்னும் நலிவுற்ற மக்களின் மனநலனுக்காக செயல்படும் தன்னார்வ தொண்டு நிறுவனத்துடன் இணைந்து இம்மையங்களை தமிழ்நாட்டில் மேலும் 10 மாவட்டங்களில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் (Tripartite Agreement) இன்று (8.2.2021) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர். ஜே. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., சென்னை அரசு மனநல காப்பகம் இயக்குநர் டாக்டர். பூர்ணசந்திரிகா மற்றும் பான்யன் இயக்குநர் டாக்டர். கே. கிஷோர்குமார் ஆகியோரால் கையெழுத்து இடப்பட்டது.

இம்மையங்களில் சாலையோரங்களில் மனநோயால் பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் தன்னார்வ தொண்டு நிறுவன மூலம் அரசு மருத்துவமனைகளுக்கு அழைத்து வரப்பட்டு, அவர்களின் மனநோய்க்கான மருத்துவம் மற்றும் உளவியல் சிகிச்சை அளிக்கப்படும். மேலும், அவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு வேண்டிய திறன் மேம்பாட்டு பயிற்சிகளும் இம்மையங்களில் அளிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை இணைச் செயலாளர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். ஆர். நாராயணபாபு மற்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் டாக்டர் எஸ். குருநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

--- ---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9